# செயல்பாட்டிற்கான ஒரு அழைப்பு

*ஆற்றல் வாய்ந்த செயல்பாடுகள் அப்போஸ்தலர்களின் நடபடிகள் முழுவதிலும் ஊடுருவியிருக்கின்றன! இயேசுவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் அவருக்காகச் செயல்பாட்டில் சுறுசுறுப்பாயிருக்கும்படியான ஒரு அவசர அழைப்பாகவே நடபடிகள் புத்தகம் உள்ளது. கர்த்தர் அப்போஸ்தலர்களுக்குப் பயிற்றுவித்ததும் கட்டளையிட்டதுமான ஊழியத்தைப் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் அவர்கள் செய்ததையே இப்புத்தகத்தின் பெயரும் கூடக் குறிப்பிடுகின்றது. நடபடிகளின் புத்தகத்தைப் படித்தும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காகச் செயல்படும் அவசரத்தைத் தவற விடுபவர்கள் எவரும், இப்புத்தகத்தின் முக்கியமான வலியுறுத்தலைத் தவற விடுகின்றார்கள்.*

## செயல்பாடு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது

*இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குச் சில கட்டளைகள் கொடுத்தார். (மத். 28:18-20; மாற். 16:15, 16; லூக். 24:44-47 ஆகியவற்றைக் காணவும்.) மேலும் அவர், வரப் போகின்றவரான தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரைப் பற்றியும் சில வாக்குத்தத்தங்களை அவர்களுக்குக் கொடுத்தார் (யோவா. 16:7-14). பிறகு அவர் மகிமைக்குப் பரத்துக்கேறினார் (அப். 1:9-11). இயேசு வாக்குத்தத்தம் செய்திருந்தபடியே, பரிசுத்த ஆவியானவர் பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் மேலும் இறங்கி வந்து, அவர்களை அப்போஸ்தல ஊழியம் செய்வதற்கு வல்லமையளித்தார் (அப். 2:1-4). இம்மனிதர்கள் உடனடியாகச் செயல்பாட்டில் இறங்கி, உயிர்த்தெழுந்த இயேசுவைப் பற்றிய சுவிசேஷ சத்தியத்தை எருசலேமில்*

*பஸ்கா மற்றும் பெந்தெகொஸ்தே பண்டிகைகளுக்காக வந்திருந்த மக்கள் எல்லாருக்கும் அவரவர்களின் மொழி யிலேயே கேட்கும்படியாகப் பிரசங்கம் செய்தார்கள். அந்த மனிதர்கள் (அப்போஸ்தலர்கள்) படிப்பறிவற்றவர்கள் என்பதை அறிந்திருந்த அம்மக்கள் கூட்டத்தார், அப்படி யிருந்தும் அப்போஸ்தலர்கள் பல்வேறு மொழிகளில் சரளமாய்ப் பேசுவதைக் கேட்டுத் திகைப்படைந்தார்கள். அந்த நிகழ்ச்சியின்போது, கிறிஸ்துவுக்கென்று மனமாற்றம் அடைவதில் ஒரு மாபெரும் தொடக்கம் நடைபெற்றது. இது, இயேசுவின் சித்தத்தை அப்போஸ்தலர்கள் செயல்படத் தொடங்கியதாலேயே சாத்தியமாயிற்று (அப். 2:4, 14, 40, 42).*

## செயல்பாடு சித்தரிக்கப்பட்டது

*அப்போஸ்தலர்களின் செயல்பாடுகளினால் மனிதகுலத் திற்கு கிருபையை தேவன் ஊக்குவித்து அளித்த பொழுது, மனிதர்கள் ஆவலுடன் பதில்செயல் செய்தார்கள் (அப். 4:33; எபே. 2:8, 9; தீத்து 2:10, 11). சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந் தவர்கள் கொடுமையான உபத்திரவங்களை எதிர்நோக்க யிருந்தும் கூட, வைராக்கியமுள்ள ஊழியர்களாக உடனடியாக மாற்றம் பெற்றார்கள்; ஏனென்றால், கிறிஸ்தவ ஆண் அல்லது பெண் ஒவ்வொருவரும் சுவிசேஷத்தைப் போதிக்கும் பொறுப்பு தமக்கு இருப்பதாக உணர்ந்தார்கள் (அப். 8:4). அப்போஸ்தலர்கள் மற்றும் மனமாறியவர்களின் இந்த ஊக்கமான செயல்பாடுகளினால் உள்ளூர் சபைகள் எழுச்சியுடன் தோற்றம் பெற்றன.*

*நடபடிகளானது இந்த காலகட்டத்தின் வரலாற்றினுடைய ஆதார மூலமாக நமக்குள்ளது, இது கிருபையின் அளிப்புக்கு ஒவ்வொருவரும் கீழ்ப்படிவதற்கான ஒரு அழைப்பு என்று உணரப்பட வேண்டும். கர்த்தருடைய சபையின் முதல் முப்பதாண்டுகளில் கிருபையானது எப்படி அளிக்கப்பட்டு மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதற்கான நமது ஒரே பதிவேடாக இது உள்ளது. இது ஒரு வரலாற்றுப் புத்தகமாகும் - கிறிஸ்துவுக்காகக் கிறிஸ்தவர்கள் செயல்படச் சென்ற வரலாறு, தேவனுடைய கிருபையின் ஈவை மக்கள் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காக அப்போஸ்தலர்கள் என்ன போதித்தார்கள்*

என்ற வரலாறு ஆகியவை உள்ளன. உலகம் முழுவதிலும் சுவிசேஷப் பணியாற்ற வேண்டும் என்று கிறிஸ்தவர்களுக்குள் பற்றி எரிந்த ஆர்வத்தின் வரலாறாக இது உள்ளது.

இயேசு மரித்ததற்கான நோக்கத்தின் ஊழியம் எவ்விதம் நிறைவேற்றப்பட்டதென்பதைக் காட்டுவதே இந்தப் புத்தகத்தின் அடிப்படை வடிவமைப்பாகும். அப்படியில்லையென்றால், பிரசங்கங்கள் பதிவு செய்யப்பட்டது ஏன்? மனமாற்றத்தின் நிகழ்ச்சிகள் பலவும் விபரமாகப் பதிவு செய்யப்பட்டது ஏன்? இதன் எழுத்தாளரான லூக்கா, அப்போஸ்தலர்களின் ஊழியப் பணியை மிக நெருக்கமாய்ப் பின் தொடர்ந்தது ஏன்?

கிறிஸ்துவுடன் உறவை ஒருவர் எவ்விதம் தொடங்கலாம் என்று காட்டுவதற்காக நடபடிகள் வடிவமைக்கப்பட்டது. நடபடிகள் புத்தகமானது தேவனிடத்திலிருந்து வெளிப்படுத்துதலை செயல் விளக்கப்படுத்துகின்றது. இது, பாவ மன்னிப்பு மற்றும் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிபவர்களுக்கான நம்பிக்கையான பரலோகம் ஆகியவை பற்றி தேவனுடைய இறுதியான பங்களிப்பை/ஈவை பதிவு செய்துள்ளது. இது பரலோகத்தின் தேவனை ஒவ்வொரு தலைமுறையிலும் பிரியப்படுத்தக் கூடிய செயல்பாடுகளை வெளிப்படுத்துகின்றது.

கடுமையான அச்சுறுத்தல்கள் மற்றும் உபத்திரவத்தின் முன்னிலையிலும் அப்போஸ்தலர்கள் "இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள்" (அப். 5:42). சபைக்கு ஒரு முக்கியப் பணி இருந்ததை அவர்கள் உணர்ந்தார்கள், அது: இழந்து போகப்பட்டவர்களுக்கு இரட்சிப்பின் நற்செய்தியைப் பிரசங்கித்து மற்றும் போதிப்பது என்பதாகும். சபையின் தொடக்கம் மற்றும் இருப்பு ஆகியவற்றிற்கு வேறு எந்தக் காரணமும் தரப்படவில்லை.

அப்போஸ்தலர்கள் என்பவர்கள் வாழுகின்ற மற்றும் சுவாசிக்கின்ற, "பிரசங்கிக்கும் இயந்திரங்களாய்" இருந்தார்கள். இயேசுவுக்காக பலி செலுத்தும் பீடங்களில் அவர்கள் தங்களையே கொடுத்து, இயேசு அவர்களுக்குப் பயிற்றுவித்ததை, வல்லமை/அதிகாரம் கொடுத்ததை, செய்யும்படி அவர் அவர்களிடம் எதிர்பார்த்ததைச் செய்வதில் தங்கள் வாழ்நாளைக் கழித்தார்கள். சபை உறுப்பினர்கள் நடபடி

களைச் சரியாகப் படிக்க முடியுமென்றால், அப்புத்தகத்தின் அடிப்படை வலியுறுத்தத்தைப் புரிந்து கொள்ள முடியு மென்றால், மனமாற்றத்தின் வரலாறுகளைச் சரியாகப் பயன்படுத்த முடியுமென்றால், மற்றும் தேவன் தம்முடைய மாபெரும் ஊழியத்தைச் செய்வதற்கு அவர்களைச் சார்ந்துள் ளார் என்ற மறைமுகமான கருத்துக்களைக் காண முடியு மென்றால், கிறிஸ்தவர்களின் பகுதியாக அவர்கள் இன்றைய நாட்களில் ஆவிக்குரிய வகையில் கடும் பணியாளர்களாய் இருக்க வேண்டும் என்பதை அவர்கள் உணருவார்கள். அதை செய்யத் தவறினால் அது ஆவிக்குரிய குற்றமாயிருக்கிறது என்பதையும் உணருவார்கள்.

## செயல்பாடு முன்மொழியப்பட்டது

ஒருவர் இந்தப் புத்தகம் முழுவதிலும் அன்று இரட்சிப்புக்கு வழி நடத்திய செயல்களின் தொடர்களைக் காண முடியும் - அதே செயல்களின் தொடர்தான் இன்றும் இப்பொழுதும் இரட்சிப்புக்கு வழி நடத்துகின்றது: (1) சத்தியத்தை அறிந்த அப்போஸ்தலர்கள் அதை மற்றவர்களுக்குப் போதித்தார்கள்; (2) சுவிசேஷம் முன் வைக்கப்பட்டபோது அதை சத்தியம் என்று மக்கள் ஏற்றுக் கொண்டு, விசுவாசித்தார்கள்; (3) விசுவாசித்தவர்கள் தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும் பினார்கள்; (4) மனம் வருந்திய விசுவாசிகள் இயேசுவை கிறிஸ்து என்று தாங்கள் விசுவாசித்ததை குரலெடுத்துக் கூறினார்கள்; (5) மனம் வருந்திய மற்றும் அறிக்கையிட்ட விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்தப் பட்டார்கள்; மற்றும் (6) ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் மற்றவர்களுக்கு சுவிசேஷத்தைப் போதித்தல் என்ற தங்களின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

கிறிஸ்தவர்கள் ஆத்தும ஆதாயப்பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும், ஆனால் இன்றைய நாட்களில் பல சபைகளில் இப்படிப்பட்ட செயல்பாட்டிற்குப் பெரும் ஆர்வம் காணப் படுவதில்லை. கர்த்தருக்கென்று ஊழியம் செய்யாத சபை விசுவாசிகளின் மத்தியில் தான் அதிக பட்ச அளவு வேலையற்ற நிலை உள்ளது. உள்ளூர் சபைகள் உலகிலேயே மோசமான நலப்பணியைக் கொண்டவையாய் உள்ளன; உறுப்பினர்களில்

பெரும்பாலோர் ஆவிக்குரிய நிலையில் சார்ந்திருப்பவர்களாக, தங்கள் தோழர்களுக்கு சத்தியத்தைப் போதிப்பதில் ஊக்கம் காட்டாதவர்களாக இருக்கின்றார்கள். அண்டை அயலார் அல்லது நண்பர் ஆகியோரிடம் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளச் செலவு எதுவும் ஆவதில்லை, இருப்பினும் கிறிஸ்தவர்கள் மற்றவர்களின் ஆத்துமாக்களில் முதலீடு செய்யத் தவறுகின்றார்கள்.

இன்றைய நாட்களில் கிறிஸ்தவம் என்ற மேடையில் செயல்படாத நடிகர்கள் பலர் இருக்கின்றார்கள். மூப்பர்கள்: நீங்கள் ஊழியம் செய்யும் சபையானது அப். 2ல் எருசலேமில் இருந்த சபையைப் போல இன்றைய நாட்களில் உலகிலேயே ஒரே ஒரு சபையாக இருந்தால் என்ன செய்வீர்கள்? பிராந்திய சபையானது தற்சமயம் செயல்படும் சுவிசேஷ ஊழியத்தை மட்டும் தொடர்ந்தால் உலகில் எத்தனை பேர் கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்படுவார்கள்? உங்களைப் போலவே சபையில் உள்ள ஒவ்வொருவரும் ஆத்தும ஆதாயம் செய்பவர்களாய் இருந்தால் எப்படியிருக்கும்? இந்த ஆண்டில் கிறிஸ்துவுக் கென்று எத்தனை ஆத்துமாக்கள் ஆதாயம் செய்யப் படுவார்கள்?

பிரசங்கியார்கள்: ஆத்தும ஆதாயத்தில் உங்களின் பதிவேட்டைச் சபையின் பன்னிரெண்டு உறுப்பினர்கள் அப்படியே பின்பற்றினால், அடுத்த ஆறு மாதங்களில் கிறிஸ்து வுக்குள் ஞானஸ்நானங்கள் ஏராளமாய் இருக்குமா?

உதவிக்காரர்கள்: பிராந்திய சபைக்கு இந்த ஆண்டில் உங்களால் நிறைவேற்றப்பட்ட பொறுப்புகள் எல்லாவற்றை யும் நீங்கள் அட்டவணைப்படுத்தினால், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உங்கள் செயல்பாடுகளினால் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டதாகக் கணக்கிடப்படும் ஆத்துமாக்களின் எண்ணிக்கை எவ்வளவாயிருக்கும்?

சபைகளின் உறுப்பினர்கள்: உங்களின் ஆவிக்குரிய வெப்ப நிலைமானியில் நீங்கள் “அன்பு மற்றும் அக்கறை என்ற வெப்ப நிலை”யை எடுத்துக் கொள்ள விரும்புவீர்களா? கடந்த ஆண்டில் இழந்துபோகப்பட்ட ஆத்துமாக்களைப் பற்றி நீங்கள் அக்கறை கொண்டு, அவர்களில் எவருக்காவது சுவிசேஷத்தைப் போதிப்பதில் ஈடுபட்டீர்களா? இருக்கையில் அமர்ந்துள்ள, மந்தமான, கூட்டத்தில் ஒரு பார்வையாளரான உறுப்பினராக

மட்டுமே நீங்கள் இருந்தீர்களா? கர்த்தருடைய ஆதாயத்திற் கென்று நீங்கள் எதுவுமே செய்யாமல், உங்கள் சகோதரர் களுடன் ஐக்கியம் என்ற ஆதாயத்தைப் பெற்றீர்களா?

சபைகள்: நீங்கள் "எருசலேமை" (உங்கள் சொந்த சமூகம், நகரம்,மாநிலம், நாடு அல்லது பகுதியை) கிறிஸ்துவைப் பற்றிய போதகத்தினால் ''நிரப்பினீர்களா?'' (அப். 5:28). ஆதிக் கிறிஸ்தவர்கள் அவ்விதம் செய்ததாக நடபடிகள் பதிவு செய்துள்ளது. நீங்கள் வசனத்தைப் பரப்பாதிருந்தால், ஏன் அதைச் செய்யக் கூடாது?

பல சபைகள், தாங்கள் மட்டுமே "வசனத்தை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு" இருப்பதிலும் "விசுவாசத்தின் முகப்பாய்" இருப்பதிலும் சௌகரியமாக உணர்ந்து கொள்கின்றன. இந்த சபைகள் எப்பொழுதாவது, நடபடிகளின் செய்தியைக் கவனித்துப் பார்த்து, இயேசுவுக்காய் ''ஊழியம் செய்யும் முகப்புக்களாய்'' ஆகுமா?

''சபை ஊழியம்'' என்றால் ஆராதனை மற்றும் வேத வகுப்புகள் ஆகியவற்றில் கலந்து கொள்ளுதல் மட்டுமே என்று நினைத்து பல மக்கள் முட்டாளாக்கப்படுகின்றார்கள். ஆண்கள் மற்றும் பெண்களில் பலர், தாங்கள் ஒரு வகுப்பிற்குப் போதித்தால் அல்லது சபை கூடுதலில் தாங்கள் ஏதாவது ஒரு வகையில் உதவி செய்வதில் ஈடுபட்டால் தங்களின் சபை ஊழியம் நிறைவேறியதாக நம்புகின்றார்கள். இப்படிப்பட்ட செயலானவை நிச்சயமாகவே நல்லதும் தகுதியானதுமாய் இருந்தாலும், இது சபையின் முக்கியமான ஊழியத்தை நிறைவேற்றுவதில்லை. ஒன்று கூடி ஆராதிக்க மட்டுமே சபை யானது வடிவமைக்கப்படவில்லை; சபையானது அன்புக்கும் நற்கிரியைக்கும் ஏவப்படும்படி(தூண்டப்படும்படி)யாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது (எபி. 10:24, 25). "சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாய்" இருப்பது (1 தீமோ. 3:15) என்பதை அர்த்தப்படுத்துவதெதுவோ அதை சபையானது நிறைவேற்ற வேண்டியதாய் இருக்கின்றது. மிக அதிகமான சபைகள் "சத்தியத்தின் *தலையணைகளாய்*" உள்ளன; அதாவது வேலை யில் அவை தூங்குகின்றன. உலக முழுவதிலும் சத்தியத்தைப் பரப்புவதில் அவைகள் முக்கிய "பலத்தின் *தூண்களாய்*" இருக்க வேண்டியுள்ளது.

ஒரு நபர், சரியாய் காலம் காட்டாத கடியாரம் ஒன்றை

*வாங்கினால், என்ன நடக்கும்? சாதாரணமாக, அந்த நபர் அக்கடிகாரம் வாங்கப்பட்டதன் - சரியாய்க் காலம் காட்டுதல் என்ற - நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அதைச் சரி செய்ய முடியுமா என்று பார்ப்பார். மறுபடி மறுபடி சரி செய்தும் கூட, அக்கடிகாரம் சரியாய் நேரம் காட்டாதிருந்தால், அது தூக்கியெறியப்பட வேண்டியதுதான்.*

*என்றால், ஊழியம் செய்யாத சபைகளைக் குறித்து தேவன் என்ன செய்வாரென்று ஒருவர் யூகிக்கிறார்? தவறான கடிகாரமாய் நாம் இருந்தால் அவர் நம்மேல் பிரியமாய் இருப்பாரா? ஒரு சபையானது அது இருக்கும் சொந்த சமூகத்தில் செயல் விளைவை ஏற்படுத்தவில்லையென்றால், அதைத் தேவன் நியாயத்தீர்ப்பின் நாளில் தூக்கியெறிந்து விட வேண்டியதாய் இருக்கும். சபைகளுக்குக் குழுக்கள் என்ற வகையில் பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டுள்ளது என்பதை ஒருவர் உணர வேண்டும் - எடுத்துக்காட்டாக ஆசியாவில் இருந்த ஏழு சபைகளுக்கும் வெளி. 1 முதல் 3 வரை கர்த்தர் அறிவுறுத்தினார்.*

*எந்த ஒரு சபைக்கும் கர்த்தர் கொடுத்துள்ள வேறு முக்கிய ஊழியம் என்ன? நமது உள்ளூர் சமூகங்களில் நாம் ஏற்படுத்தும் செயல் விளைவு குறித்த நமது வெப்ப நிலையை (உற்சாகத்தை)க் கவனிப்பதற்கும், உலகில் செய்யும் சுவிசேஷ ஊழியத்தில் நாம் எவ்விதம் உதவப் போகின்றோம் என்பதைக் கவனிப்பதற்கும் இதுவே நேரமாகும்.*

*எந்த ஒரு சபையிலும் கிறிஸ்துவுக்குள் ஒரு ஆத்துமாவை ஞானஸ்நானப்படுத்துவதற்கு எத்தனை உறுப்பினர்கள் (முயற்சி செய்வது) தேவை என்பதை நிதானித்துக் கவனிப்ப தற்கான நேரம் இதுவேயாகும். கடந்த ஐம்பது ஆண்டுகளில், சபைகளில் வழக்கமாக இது 10 சதவிகிதமாகவே இருந்துள்ளது; அதாவது, எந்த ஒரு ஆண்டிலும் சபையானது அதன் உறுப்பினர் களின் எண்ணிக்கையில் 10 சதவிகித அளவே (புதிதாய்) நபர்களை ஞானஸ்நானப்படுத்த முடிந்துள்ளது. (எடுத்துக் காட்டாக, அமெரிக்காவில் 300 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையானது வழக்கமாய் ஒரு ஆண்டில் ஏறக்குறைய 30 பேர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்துள்ளது.) இருந்தாலும், வழக்கமாய் சபைக்கு வரும் பிள்ளைகள் ஞானஸ்நானப் படுத்தப்படும் வயதை அடைவதினால் இந்த 10 சதவிகித வளர்ச்சி என்பது சமுதாயத்தில் உள்ள தவறுகளையும்*

பாவங்களையும் விட்டுவிட்டு, கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்த தினால் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல வென்றாகின்றது. சபையின் குடும்பங்களில் உள்ள பிள்ளை களுக்கு போதித்தல் என்பது நிச்சயமாகவே பாராட்டப்பட வேண்டியதாகும், ஆனால் இப்படிப்பட்ட குறைந்த வளர்ச்சி விகிதமானது சோம்பலான ஊழியத்தின் வருத்தமான வரலாற் றையே கூறுகின்றது. இந்த சபைகள் தங்கள் திறமைகளைப் புதைத்துக் கொண்டு, கர்த்தருக்காக வெளியே அடியெடுத்து வைத்து தைரியமாயிருப்பதில் பயந்திருக்கின்றன.

அமெரிக்காவில் உள்ள பெரும்பான்மையான சபைகள் உள்ளூர் சமுதாயத்தில் "புறம்பே" இருப்பவர்களுக்குத் தாங்கள் போதித்து ஞானஸ்நானம் கொடுத்த ஊழியத்தின் விளைவை மிகச் சரியாகப் பட்டியலிட்டுப் பார்த்தால் அதிர்ச்சியடையக் கூடும். ஆகையால், ஒரு ஆண்டில் நூறு ஞானஸ்நானங்கள் கொடுத்தோம் என்று அறிக்கை தரும் சபைகள் கூட, ஞானஸ்நானம் பெற்றவர்களில் எத்தனை பேர் அவர்களின் சொந்தப் பிள்ளைகள் என்பதை ஆய்வு செய்தால் சங்கடமடை யலாம். அவர்கள் 10 சதவிகித வளர்ச்சி விகிதத்தைக் காத்திருந் தால் கூட அது எத்தனை ஞானஸ்நானங்களாய் இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்!

## முடிவுரை

நடபடிகள் என்பது செயல்பாட்டிற்கான தேவனின் அழைப்பாகும். முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்கள் எவ்விதம் பதில்செயல் செய்தார்கள் என்பதை அது பதிவு செய்துள்ளது, ஆனால் அது ஒவ்வொரு சீஷரும் செயல்படு வதற்குக் காலமற்ற அழைப்பாகவும் இருக்கின்றது.

தேவனுக்கு தைரியமும் கற்பனை உணர்வும் கொண்ட மக்கள் தேவை. உறுதிப்பாடு, நிலைப்பாடு மற்றும் தைரியம் கொண்ட மக்கள் அவருக்குத் தேவை. உலகத்தினால் தடம் மாற்றமடையாத சீஷர்களே கர்த்தருக்குத் தேவை. ஆவிக் குரியவைகளுக்கு முன்னுரிமை அளிப்பவர்களே இயேசுவுக்குத் தேவை. பரலோகத்தைத் தங்களின் சிந்தனையின் மையமாய்க் கொண்ட மக்களே அவருக்குத் தேவை.

நடபடிகள் என்பது ஒளிமிக்கதொரு கலங்கரை விளக்க

மாக, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களின் சக்தி, செயல்பாடு, ஊக்கம், விடாமுயற்சி மற்றும் தைரியம் ஆகியவற்றின் ஒளி வீசும் நினைவாக உள்ளது. இந்தப் புத்தகமானது இயேசு இப்பூமியில் இருந்திருந்தால் என்ன செய்திருப்பார் - அவர் இப்பூமியில் இருந்தபோது, கவனிக்கும் யாவருக்கும் நம்பிக்கை மற்றும் இரட்சிப்பைக் கொண்டு வருதல் என்பதைச் செய்தது போலவே செய்திருப்பார் - என்பதைக் காட்டுகின்றது. இயேசு "தேவனுடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டுள்ள" (அப். 2:33) இவ்வேளையில் தமது சித்தத்தைத் தம்மைப் பின்பற்றுபவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். ஒவ்வொரு நூற்றாண்டிலும், சபையார், ஊழியம் செய்யும் ஆத்தும ஆதாயக்காரர்களாயிருந்து, தமது சுவிசேஷமாகிய கிருபையின் நற்செய்தியை ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒவ்வொரு நபருக்கும் பரப்புவது அவசியம் என்பதால் சபையாரை அவர் நம்பியிருக்கின்றார்.

கிறிஸ்து பரத்துக்கேறுவதற்கு முன் தமது சீஷர்களுக்குத் தந்த பிரதான கட்டளையின் (மத். 28:18-20; மாற். 16:15, 16; லூக். 24:44-47) விளைவுகளை நடபடிகள் பதிவு செய்துள்ளது. ஆகையால், எந்தவொரு சந்ததியிலும் மக்கள் இப்புத்தகத்தை வாசிக்கும் பொழுது, என்ன செய்திருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகின்றார் என்பதை முடிவு செய்வது சுலபமாகும். என்ன செய்வது என்பதை அறிவது கடினமல்ல: போங்கள், போதியுங்கள் மற்றும் பிரசங்கியுங்கள். எங்கு போவது என்பதை அறிவதும் கடினமல்ல: சகல ஜாதிகளிடத்திலும். என்ன போதிப்பது என்பதை அறிவதும் கடினமல்ல: மனந்திரும்புதல் மற்றும் பாவமன்னிப்புக்கான சுவிசேஷம். யாரைத் தொடர்பு கொள்வது என்பதை அறிவதும் கடினமல்ல: சர்வ சிருஷ்டிக்கும். விசுவாசிகள் என்ன செய்வதற்கு உதவ வேண்டும் என்பதை அறிவதும் கடினமல்ல: கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்தப்படுதல். மனம் மாறி ஞானஸ்நானம் பெற்றவர்கள் என்ன செய்வதற்கு உதவ வேண்டும் என்பதை அறிவதும் கடினமல்ல: இயேசு கட்டளையிட்ட யாவற்றையும் கடைப்பிடித்தல்.

நடபடிகளின் தெளிவான செய்திக்குக் கீழ்ப்படிவோம்: அது கிறிஸ்துவுக்குள் உள்ள ஒவ்வொரு நபரும் செயல்படுவதற்கான ஒரு அழைப்பாகும்.